# யா/அராலி இந்துக் கல்லூரி

# பரிசுதினம் - 2017

## அதிபர் அறிக்கை

# நிகழ்ச்சிநிரல்

- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- தேசியக் கொடியேற்றல்
- வரவேற்பு நடனம்
- வரவேற்புரை
- ஆசியுரை
- வாழ்த்துரை
- அதிபர் அறிக்கை
- நினைவுப்பேருரை
- சிறப்பு விருந்தினர்கள் உரை
- பரிசில் வழங்கல்
- பிரதம விருந்தினர் உரை
- கௌரவிப்பு நிகழ்வு
- கலை நிகழ்வுகள்
- நன்றியுரை

## அதிபர் அறிக்கை 2017

எமது கல்லூரியில் வீற்றிருந்து எமக்கெல்லாம் திருவருள் புரிந்து கொண்டிருக்கும் எல்லாம் வல்ல இறைவனின் பாதங்களை முதற்கண் வணங்கிக்கொண்டு என்னை இந்நிலை அடையச்செய்த ஆசான்களை இந்நேரத்தில் நினைவு கூருகின்றேன். இன்றைய பரிசளிப்பு விழாவில் எம்மை மகிழ்விக்க வந்திருக்கும் பிரதம விருந்தினர் திரு. சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் அவர்களே, சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திரு.திருமதி.சிவானந்தன் அவர்களே, திரு.தி.விஜயகாந்தரூபன் அவர்களே, கௌரவ விருந்தினராக வருகை தந்திருக்கும் திருமதி சிவகாமசுந்தரி விஜயரட்ணம் அவர்களே, ஆசியுரை வழங்க வந்திருக்கும் சிவஸ்ரீ பிரதீப் குருக்கள் அவர்களே, வாழ்த்துரை வழங்க வருகை தந்திருக்கும் Dr.செ.பரமசிவம்பிள்ளை அவர்களே, நினைவுப்பேருரை வழங்க வந்திருக்கும் இப்பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் திரு.ச.செல்வராசா அவர்களையும் பாடசாலையின் உப அதிபர் அவர்களையும் வரவேற்கின்றேன்

அத்துடன் கல்லூரியின் முன்னாள் அதிபர்களே, அயற் பாடசாலை அதிபர்களே, பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே, பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்களே, பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே, பெற்றோர்களே, நலன் விரும்பிகளே, ஓய்வு நிலை ஆசான்களே, ஆசிரியர்களே, மாணவச் செல்வங்களே, கல்விசாரா அலுவலரே அனைவருக்கும் எனது அன்பு நிறைந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இக்கல்லூரி 1923ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 94 வருடங்கள் நிறைவடையும் நிலையில் இக்கல்லூரியின் உன்னத வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு உழைத்த அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் நினைவு கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன். அத்துடன் எமது கல்லூரி வளர்ச்சிக்காக பங்காற்றும் மாகாணக் கல்வித் திணைக்களத்தினர், வலயக்கல்வித் திணைக்களத்தினர், கோட்டக்கல்வி அலுவலகத்தினர் அனைவருக்கும் எம் கல்லூரி சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இன்றைய பரிசு நாளை பெருமைக்குரிய நாளாக நினைவு கொள்ளும் வகையில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளுமாறு அழைத்த போது எதுவித மறுப்பும் கூறாது எமக்கு மதிப்பளித்து வருகை தந்துள்ள திரு.சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் அவர்களின் நல்லொழுக்கத்தை நேசிக்கின்றேன். இவர் ஆரம்ப, இடைநிலைக் கல்வியை இணுவில் மத்திய கல்லூரியிலும், உயர் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கற்று பேராதனைப் பல்கலைக் கழகத்தில் BA,MA பட்டங்களைப் பெற்றவர். சிறப்பாக தமிழ்மொழியை சிறப்புக் கலையாகக் கற்றதுடன் PGDE, MED, PGDEM பட்டங்களையும் பெற்றுள்ளார். அத்துடன் கல்வி நிர்வாக சேவையிலும் (SLEAS) பதவியுயர்வு பெற்று சிறந்த கல்விமானாகத் திகழும் ஒருவராவார். அத்தோடு எமது திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளராக இருந்து அருஞ்சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும். இவர் பிரதம விருந்தினராக வருகை தந்தமை பாடசாலைக்கு ஒரு பொன்னாள் என்றே கூற வேண்டும். இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக தொடர்ந்தும் உதவி புரிவார் என்று நம்புகிறேன்.

சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கின்ற திரு. சிவானந்தன் அவர்கள் இக்கல்லூரியின் பழைய மாணவராவார். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்ற பொறியியலாளரா வார். எமது நாட்டில் சேவையாற்றி தற்போது அவுஸ்ரேலியாவில் நீர் வழங்கல் துறையில் பொறியியலாளராகப் பணியாற்றி வருகின்றார். இவரது தந்தையார் அமரர் நெல்லிநாதன் அவர்கள் இக்கல்லூரியில் அருஞ்சேவையாற்றி கல்லூரிக் கீதத்தை இயற்றியவர் என்ற பெருமைக்குரியவராவார். இவரது குடும்பத்தினர் பரிசுத் தினத்திற்கு வருடந்தோறும் பணப்பரிசு வழங்கி வருவது பாராட்ட வேண்டிய ஒன்றாகும். இவர்கள் பாடசாலை நலனில் அக்கறை கொண்டு நிதியுதவி புரிவதோடு இன்று இவ்விழாவில் கலந்து கொள்வதையிட்டு நான் பெரு மகிழ்வடைகின்றேன்.

சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கின்ற திரு. தி.விஜயகாந்தரூபன் அவர்கள் எமது பாடசாலையில் தரம் 1

தொடக்கம் 11 வரை கல்வி கற்று யாழ் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றி எமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்தவராவார். தற்போது லண்டனில் வசிக்கின்ற போதும் எமது கல்லூரி நலனில் அக்கறை கொண்டு கல்லூரியில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு வருடந்தோறும் நிதியுதவி அளித்து வருகின்றார். அவர் பாடசாலையை நேசிப்பதோடு இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பிப்பது எமக்கு மன மகிழ்ச்சியை அளிக்கின்றது.

கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண் டிருக்கும் எமது கல்லூரியின் முன்னாள் சங்கீத ஆசிரியர் திருமதி.சிவகாமசுந்தரி விஜயரட்ணம் அவர்கள் இக்கல்லூரியில் தான் கற்பித்த காலப்பகுதியில் க.பொ.த சாதாரண பரீட்சையில் மாணவர்களை 100 வீதம் சித்தியடையச் செய்த பெருமைக் குரியவர். எமது பாடசாலையின் கல்லூரிக் கீதத்திற்கு இசை யமைத்தவர். இசையும் அசைவும் பண்ணிசை நிகழ்வுகளில் மாணவர்களை மாகாண மட்டத்தில் பங்குபற்றி பரிசுகள் பெற வைத்தவர். இவர் இன்று இப்பரிசு தின நிகழ்வுக்கு வருகை தந்துள்ளமை எமக்கு பெரு மகிழ்வினைத் தருகின்றது.

இன்றைய நிகழ்விற்கு வருகை தந்துள்ள அனைத்து பெருமக்களையும் எனது உபஅதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர், மாணவர்களுடன் இணைந்து வணக்கம் கூறி வரவேற்கின் றேன். இந்நேரத்திலே இன்றைய பரிசுநாள் அறிக்கையினை மிக்க மகிழ்வுடன் உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

எமது கல்லூரியில் தற்போது அதிபர், உபஅதிபருடன் 21 ஆசிரியர்களும், இரு பகுதி நேர ஆசிரியர்களும், தொண்டர் ஆசிரியரும், கல்விசாரா ஊழியரும், 302 மாணவர்களுமாக இணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

**எமது கல்லூரிக் குடும்பத்துடன் இணைந்தவர்**

எமது கல்லூரியில் 2017இல் உபஅதிபராக இணைந்து கொண்ட திரு.நி.முருகானந்தன் அவர்கள் எமது பாடசாலையின்

வளர்ச்சிக்கு மிகவும் அரும்பாடுபட்டு உழைக்கக்கூடியவர் என்பதால் அவரை மனமுவந்து வரவேற்பதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

## கல்விச் செயற்பாடுகள்

2016 புலமைப்பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகளைப் பெற்று சித்திபெற்ற கை.நிகல்யா, 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 7 மாணவர்களையும், 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 11 மாணவர்களையும் அரும்பாடுபட்டு வழிப்படுத்திய திருமதி.த.ஞானகுமார் ஆசிரியர் அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் ஆசிரியருக்கு உதவி புரிந்த மாணவர்களின் பெற்றோர்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

## க.பொ.த(சா/த) பரீட்சைப் பெறுபேறுகள்

| | | | |
|---|---|---|---|
| சைவசமயம் | 91% | கிறிஸ்தவம் | 75% |
| தமிழ் | 72% | ஆங்கிலம் | 6% |
| கணிதம் | 43% | வரலாறு | 57% |
| விஞ்ஞானம் | 32% | வர்த்தகம் | 93% |
| குடியுரிமை | 48% | சங்கீதம் | 100% |
| சித்திரம் | 100% | நடனம் | 67% |
| கடற்றொழில் | 93% | இயந்திரவியல் | 40% |
| சுகாதாரம் | 94% | | |

மேற்படி பெறுபேறுகளுக்கு வழிப்படுத்தி சித்திபெற வைத்த பாடங்களுக்குப் பொறுப்பான ஆசிரியர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன். அத்துடன் முதன் முறையாக 8A,B பெறுபேற்றைப் பெற்ற இ.எழில்வதனா என்ற மாணவியையும் அவரை வழிப்படுத்திய ஆசிரியர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன். இவ்வருடம் சகல பாடங்களிலும் சித்தி வீதத்தை அதிகரிப்பதற்கு பாடுபடுகின்றோம்.

**விளையாட்டுத்துறை**

2016இல் கோட்ட மட்டத்தில் நீளம் பாய்தலில் முதலாம் இடம்பெற்று வலய மட்டத்தில் 2ஆம் இடத்தையும் பெற்ற மாணவனையும் அவருக்குப் பயிற்சியளித்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**தமிழ்த்துறை**

கோட்ட மட்டத்தில் நடைபெற்ற தமிழ்த்தினப்போட்டியில் இரண்டு முதலாம் இடங்களும், இரண்டு இரண்டாம் இடங்களும், ஒரு மூன்றாம் இடமும் கிடைக்கப்பெற்றுள்ளன. இதற்கு வழிகாட்டிய ஆசிரியர்களையும், வெற்றி பெற்ற மாணவர்களையும் வாழ்த்துகின்றேன்.

**சமூக விஞ்ஞானத்துறை**

வலய மட்டத்தில் நடைபெற்ற சமூக விஞ்ஞானப் போட்டியில் இரண்டாம் இடம்பெற்ற மாணவியையும் அவரைப் பயிற்றுவித்த ஆசிரியரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**இந்து சமயத்துறை**

எமது கல்லூரியில் இந்துமாமன்றம் சிறப்புறச் செயற்பட்டு வெள்ளிக்கிழமைகளில் விசேட கூட்டுப் பிரார்த்தனை, பூசை வழிபாடு என்பவற்றை நடாத்தி வருகின்றது. தினமும் காலைப் பிரார்த்தனையைத் தொடர்ந்து மாணவர், ஆசிரியர்களின் நற்சிந்தனை இடம்பெற்று மாணவர்களிடத்தில் நற்பழக்கங்கள் வளர்க்கப்பட்டு ஆளுமை விருத்தியும் ஏற்படுகின்றது. அத்தோடு தைப்பொங்கல், ஆடிப்பிறப்பு, நவராத்திரி விழா, சமய குரவர்களின் குருபூசை என்பன சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. இவற்றைத் திறம்பட நடாத்துகின்ற ஆசிரியர்களையும் மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**சுகாதாரத்துறை**

சுகாதார மன்றம், வேள்ட்விஷன் (World Vision) ஆதரவிலான சுகாதார அலகைக்கொண்டு இயங்குகின்றது. முதலுதவி, போசனை செயற்றிட்டம் உட்பட பல செயற்றிட்டங்களை ஆற்றி வருகின்றது. சுகாதாரக் குழுவிற்கு பொறுப்பான ஆசிரியரையும், குழுவிலுள்ள மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**வணிகத்துறை**

வலய மட்டத்தில் நடைபெற்ற வணிகப் போட்டியில் 2ஆம் இடம்பெற்ற மாணவனையும் அவரைப் பயிற்றுவித்த ஆசிரியரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**ஆங்கில தினப் போட்டி**

கோட்ட மட்டத்தில் நடைபெற்ற ஆங்கில தினப் போட்டியில் ஒரு முதலாம் இடமும் ஒரு 2ஆம் இடமும் ஒரு 3ஆம் இடமும் வலய மட்டத்தில் ஒரு 3ஆம் இடமும் கிடைக்கப்பெற்றுள்ளன. வெற்றி பெற்ற மாணவர்களையும் வழிகாட்டிய ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றேன்.

**ஆரம்பப்பிரிவுத்துறை**

ஆரம்பப்பிரிவு மாணவர்கள் குடும்ப மட்டத்தில் சித்திரம், வாய்ப்பாடு, விரைவுகணிதம், பண்ணிசை, விநாடிவினா, ஆங்கில சொல்வதெழுதுதல் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றுள்ளார் கள். அத்துடன் சித்திரப் போட்டிகளில் கோட்ட மட்டத்தில் இரு மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளனர். ஆங்கில உறுப்பெழுத்துப் போட்டியில் கோட்ட மட்டத்தில் முதலாம் இடமும் வலயத்தில் 3ஆம் இடமும் ஒரு மாணவர் பெற்றுள்ளார். ஆரம்பப்பிரிவு மன்றங் கள் திறம்பட நடைபெற்று மாணவர்களின் இணைப்பாட விதானச் செயற்பாடுகளை வளர்த்து வருகின்றன. ஆரம்பப்பிரிவு ஆசிரியர் களையும் மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**விழாக்கள்**

பொங்கல் விழா, கால்கோள் விழா, இல்ல மெய்வல்லுநர் விழா, ஆசிரியர் தின விழா, நவராத்திரி விழா, சிறுவர் தின விழா போன்ற நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

**நன்றிக்குரியவர்கள்**

2016ம் ஆண்டில் கல்லூரியின் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டு உழைத்த ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கு எமது நன்றிகள், புலமைப்பரிசில் மாணவர்களுக்கான மேலதிக வகுப்புக்களில் கற்பிக்கின்ற பு.அனுசா அவர்களையும், க.பொத. சாதாரண மேலதிக வகுப்புக்களில் கற்பித்த A.சர்மிலா,A.அருள், K.அகிலன், M.இளங்குமரன் ஆகிய ஆசிரியர்களையும் மனதாரப் பாராட்டுகின்றேன். மற்றும் சுகாதார சேவை வழங்கும் வைத்தியர் திரு.S.மோகனகுமார் அவர்களுக்கும் சுகாதாரப் பரிசோதகர் திரு.வி.பிரபாகரன் அவர்களுக்கும், சமுர்த்தி உத்தியோகத்தர் திரு.வை.சுரேந்திரன் அவர்களுக்கும், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.ப.சிவாந்தி அவர்களுக்கும், கிராம அலுவலர் திருமதி. ரஞ்சிதா றிச்சேட் அவர்களுக்கும் , உணவு தயாரிப்பாளர்கள், சுகாதார ஊழியர், காவல் துறையினர், வங்கிச் சேவை புரிவோர், பாடசாலை வளர்ச்சிக்கு பண உதவி புரிந்தோர், க.பொ.த(சா/த) பரீட்சையில் அதிகூடிய சித்தி பெற்ற மாணவருக்கு அன்பளிப்பை வழங்கி வருகின்ற பழைய மாணவர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும், புலமைப்பரிசில் அன்பளிப்பை வழங்கி வரு வோருக்கும், பழைய மாணவர்களுக்கும், பாடசாலை அபி விருத்திச்சங்கத்தினருக்கும் எனது நன்றிகள். கல்லூரியின் கல்வி வளர்ச்சிக்கும் நிகழ்வுகள் சிறப்புற நடைபெறுவதற்கும் வெளிநாட்டில் வாழ்கின்ற பழைய மாணவர்கள் பண உதவிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்கு எனது சார்பாகவும், ஆசிரியர்கள் சார்பாகவும் பாடசாலை சமூகம் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இப்பாடசாலையின் நீண்ட காலமாக எதுவித வேதனமுமின்றி தன்னாலியன்ற பல்துறை சார்ந்த சேவையை ஆற்றிவரும் திரு.ப.சுப்பிரதீபன் அவர்களின் அரும்சேவை பாராட்டுக்குரியதாகும். இவர் கற்றல் செயற்பாட்டில் மட்டுமன்றி மேலதிக நேரங்களிலும், விடுமுறை தினங்களிலும் மாணவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு அரும் சேவையாற்றி வருகின்றார். இவரின் எதிர்கால வாழ்வு சிறப்புற அமைய இறைவனை வேண்டுகின்றேன்.

விசேடமாக நன்றி கூறப்பட வேண்டிய ஒருவராக வைத்தியர் செல்லையா சூரியகுமார் காணப்படுகின்றார். இவர் சென்ற வருடம் க.பொ.த(சா/த) வகுப்பு மாணவர்களுக்கு கணித, விஞ்ஞான, ஆங்கில விசேட வகுப்புக்களை தனது நிதியுதவி மூலம் நடாத்தியிருந்தார். அத்துடன் இவ்வருடமும் க.பொ.த(சா/த) வகுப்பு மாணவர்களுக்கு கணித, விஞ்ஞான, ஆங்கில விசேட வகுப்புக்களையும், புலமைப்பரிசில் விசேட வகுப்புக்களையும் ஆசிரியர்களை நியமித்து நடாத்தி வருகின்றார். அத்துடன் இவ்வருடம் சிறந்த பெறுபேறு பெற்ற இ.எழில்வதனா (8A,B) மாணவிக்கு 10000 ரூபா பணப்பரிசிலினையும் வழங்கி பாராட்டு விழா நடாத்துவதற்கு ஊக்குவித்திருந்தார். இவரை பாடசாலை சமூகம் சார்பாக மனதாரப் பாராட்டுவதுடன் மேலும் இவரது சேவை தொடர வாழ்த்துகின்றேன்.

## 2016ம் ஆண்டுக்கான பரிசுபெறும் மாணவர் விபரம்

### தரம் 01

**பொதுத்திறன் பரிசில் பெறும் மாணவர் விபரம்**

01 ஜெ.சுபானுஜா
02 ஜெ.லாவணியன்
03 உ.கவிப்பிரியன்

### தரம் 02

**பொதுத்திறன் பரிசில் பெறும் மாணவர் விபரம்**

01 ஜெ.சாருஜன்
02 சி.டினோஜா
03 வி.யதுர்ஷனா

## தரம் 03

### பாடத்திறன் பரிசில் பெறும் மாணவர் விபரம்

| | | |
|---|---|---|
| 01 க.பிரதீஷா | - தமிழ்,கணிதம்,சமயம்,ஆங்கிலம் | - 1ஆம் இடம் |
| | - சுற்றாடல் | - 2ஆம் இடம் |
| 02 சி.பிரியதர்சினி | - சுற்றாடல் | - 1ஆம் இடம் |
| | - தமிழ், கணிதம், ஆங்கிலம் | - 2ஆம் இடம் |
| 03 த.சாருஜன் | - தமிழ்,கணிதம்,சமயம்,சுற்றாடல் | - 3ஆம் இடம் |
| 04 கி.சினோஜா | - சமயம் | - 2ஆம் இடம் |
| 05 அ.மிதுர்சன் | - ஆங்கிலம் | - 3ஆம் இடம் |

### பொதுத்திறன் பரிசில் பெறும் மாணவர் விபரம்

01 ஜெ.நஸ்மிதா
02 சா.தருண்
03 ந.துஸ்யந்தி

## தரம் 04

### பாடத்திறன் பரிசில் பெறும் மாணவர் விபரம்

| | | |
|---|---|---|
| 01 சி.கலைப்பிரியன் | - சமயம் | - 1ஆம் இடம் |
| | - தமிழ், கணிதம், சுற்றாடல் | - 2ஆம் இடம் |
| 02 ந.தாரகா | - தமிழ், சுற்றாடல், ஆங்கிலம் | - 1ஆம் இடம் |
| | - சமயம் | - 2ஆம் இடம் |
| 03 க.கோபிகா | - தமிழ், ஆங்கிலம் | - 2ஆம் இடம் |
| | - சமயம் | - 3ஆம் இடம் |
| 04 ந.பிரணவன் | - கணிதம் | - 1ஆம் இடம் |
| 05 பூ.கவியரசன் | - சுற்றாடல் | - 3ஆம் இடம் |
| 06 யா.ரிதுஷா | - கணிதம், ஆங்கிலம் | - 3ஆம் இடம் |

**தரம் 05**

**புலமைப்பரிசில் சித்தி – 2016**

01 க.நிகல்யா - 152

100 புள்ளிக்கு மேற் பெற்றோர்

(01) ம.திபுசன். - 141
(02) ச.றெஸ்மின் - 139
(03) கே.தனுசா - 136
(04) சி.ரனுஜன் - 117
(05) யோ.வினுஷன் - 113
(06) சு.கிருஜா - 111
(07) நே.அம்பிகைபாலன் - 110

**70 புள்ளிக்கு மேற் பெற்றோர்**

(01) யோ.அபிசன் - 99
(02) சி.தேனுசா - 99
(03) பா.அனித்தா - 95
(04) பு.சஞ்ஞை - 92
(05) சி.கிருஷா - 92
(06) கோ.பிரவின்ராஜ் - 90
(07) சி.சங்கீதா - 90
(08) தி.உமேசன் - 89
(09) சி.தமிழினி - 87
(10) செ.தனுஸ்குமார் - 84
(11) சி.சோபனா - 75

**வேறு பாடசாலைகளில் இருந்து இப்பாடசாலையின் தரம் 6இல் கற்கும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்**

(1) யோ.தனுஜியா - 85
(02) சி.அஜெகுமார் - 74

**தரம் 06**

**பாடத்திறன் பரிசில் பெறும் மாணவர் விபரம்**

01 ச.கயூர்ணன் சமயம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியியற்கல்வி சுகாதாரம், செயன்முறை தொழிநுட்பம்
சித்திரம் - 1ஆம் இடம்
கணிதம் - 2ஆம் இடம்

02 ச.சந்திரகாந் விஞ்ஞானம் - 1ஆம் இடம்
சுகாதாரம் - 3ஆம் இடம்

| | | |
|---|---|---|
| 03 பா.பிரியங்கா | சமயம், தமிழ், ஆங்கிலம் | - 2ஆம் இடம் |
| | குடியியற்கல்வி | - 3ஆம் இடம் |
| 04 கு.சாமினி | வரலாறு | - 2ஆம் இடம் |
| | சமயம் | - 3ஆம் இடம் |
| 05 வி.லக்சனா | கணிதம் | - 3ஆம் இடம் |
| 06 கி.சுகன்யா | நடனம் | - 1ஆம் இடம் |
| | விஞ்ஞானம், குடியியற்கல்வி | - 2ஆம் இடம் |
| | செயன்முறை தொழிநுட்பம் | - 3ஆம் இடம் |
| 07 த.கிஷாந்தி | செயன்முறை தொழிநுட்பம் | - 2ஆம் இடம் |
| | புவியியல் | - 3ஆம் இடம் |
| 08 ர.மதுசாளினி | சங்கீதம் | - 1ஆம் இடம் |

**தரம் 07**

**பாடத்திறன் பரிசில் பெறும் மாணவர் விபரம்**

| | | |
|---|---|---|
| 01 இ.மயூரிகா | சமயம், தமிழ், கணிதம், வரலாறு, புவியியல் | |
| | குடியியற்கல்வி,விஞ்ஞானம்,நடனம் | - 1ஆம் இடம் |
| | ஆங்கிலம், தொழில்நுட்பம், சுகாதாரம் | - 2ஆம் இடம் |
| 02 ஜெ.கேபிரதன் | சுகாதாரம்,தொழில்நுட்பம்,ஆங்கிலம் | - 1ஆம் இடம் |
| | சமயம், தமிழ், கணிதம், வரலாறு | |
| | புவியியல், குடியியற்கல்வி | - 2ஆம் இடம் |
| | விஞ்ஞானம் | - 3ஆம் இடம் |
| 03 பா.நிகேதா | சங்கீதம் | - 1ஆம் இடம் |
| | விஞ்ஞானம் | - 2ஆம் இடம் |
| | தமிழ், ஆங்கிலம் | - 3ஆம் இடம் |
| 04 ச.பர்மிஷா | சங்கீதம் | - 1 ஆம் இடம் |
| | குடியியற்கல்வி, வரலாறு, கணிதம் | - 3 ஆம் இடம் |
| 05 வி.டன்சிகா | சமயம், சுகாதாரம் | |
| | செயன்முறை தொழில்நுட்பம் | - 3ஆம் இடம் |
| 06 வே.லனுசுயா | புவியியல் | - 3ஆம் இடம் |
| 07 பூ.பிருந்தன் | சித்திரம் | - 1ஆம் இடம் |

**தரம் 08**

**பாடத்திறன் பரிசில் பெறும் மாணவர் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 01 | இ.ஜெயவதனா | சமயம், தமிழ், கணிதம், வரலாறு விஞ்ஞானம், குடியியற்கல்வி, சங்கீதம் | - 1ஆம் இடம் |
| | | சுகாதாரம், செயன்முறை தொழிநுட்பம் ஆங்கிலம் | - 2ஆம் இடம் |
| 02 | செ.லக்ஷனா | ஆங்கிலம்,சுகாதாரம்,செ.தொழில்நுட்பம் | - 1ஆம் இடம் |
| | | புவியியல், சமயம் | - 2ஆம் இடம் |
| | | விஞ்ஞானம், குடியியற்கல்வி, | - 3ஆம் இடம் |
| 03 | செ.லக்ஷிகா | தமிழ், வரலாறு, விஞ்ஞானம், குடியியற்கல்வி | - 2ஆம் இடம் |
| | | சமயம், ஆங்கிலம், புவியியல், சுகாதாரம் செயன்முறைத் தொழில்நுட்பம் | - 3ஆம் இடம் |
| 04 | உ.உசாந்தன் | தமிழ், கணிதம் | - 3ஆம் இடம் |
| 05 | கு.வைஷ்ணவி | நடனம் | - 1ஆம் இடம் |
| | | கணிதம் | - 2ஆம் இடம் |
| 06 | ஜெ.திலக்சன் | சித்திரம் | - 1ஆம் இடம் |
| 07 | அ.குகப்பிரியா | வரலாறு | - 3ஆம் இடம் |

**தரம் 09**

**பாடத்திறன் பரிசில் பெறும் மாணவர் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 01 | கு.விதுசா | சமயம், சங்கீதம், வரலாறு | - 1ஆம் இடம் |
| | | தமிழ், கணிதம், ஆங்கிலம், குடியியற்கல்வி, சுகாதாரம் | - 2ஆம் இடம் |
| | | புவியியல், ஆங்கிலம், செ.தொழில்நுட்பம் | - 3ஆம் இடம் |
| 02 | ந.வினோஜா | தமிழ், புவியியல், நடனம் | - 1ஆம் இடம் |
| | | சமயம், வரலாறு | - 2ஆம் இடம் |
| | | குடியியற்கல்வி, விஞ்ஞானம் | - 3ஆம் இடம் |

| | | |
|---|---|---|
| 03 க.விதுர்சனன் | ஆங்கிலம் | - 1ஆம் இடம் |
| | விஞ்ஞானம் | - 2ஆம் இடம் |
| | கணிதம் | - 3ஆம் இடம் |
| 04 ச.சுபாசினி | கிறிஸ்தவம்,சுகாதாரம்,குடியியற்கல்வி | - 1ஆம் இடம் |
| | புவியியல் | - 2ஆம் இடம் |
| 05 ச.கம்ஷா | கணிதம், செயன்முறை தொழிநுட்பம் | - 1ஆம் இடம் |
| 06 ர.தமிழினி | விஞ்ஞானம் | - 1ஆம் இடம் |
| | வரலாறு | - 3ஆம் இடம் |
| 07 செ.யூட்சன் | சித்திரம் | - 1ஆம் இடம் |
| 08 பா.தனேஸ் | செயன்முறை தொழிநுட்பம் | - 2ஆம் இடம் |
| 09 கி.றொசானி | ஆங்கிலம் | - 2ஆம் இடம் |
| | தமிழ், சமயம், சுகாதாரம் | - 3ஆம் இடம் |

**தரம் 10**

**பாடத்திறன் பரிசில் பெறும் மாணவர் விபரம்**

| | | |
|---|---|---|
| 01 ஜெ.இன்சன் | சமயம், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் | |
| | வணிகக்கல்வி | - 1ஆம் இடம் |
| | தமிழ், வரலாறு | - 2ஆம் இடம் |
| 02 ச.கெனிஸ்ரன் | வரலாறு, தமிழ், சித்திரம், சுகாதாரம் | - 1ஆம் இடம் |
| | சமயம்,கணிதம்,ஆங்கிலம்,விஞ்ஞானம் | - 2ஆம் இடம் |
| 03 இ.தமிழரசன் | சங்கீதம், குடியியற்கல்வி | - 1ஆம் இடம் |
| | வரலாறு, விஞ்ஞானம் | - 3ஆம் இடம் |
| 04 ர.பனுஜா | நடனம் | - 1ஆம் இடம் |
| | சமயம், ஆங்கிலம் | - 3ஆம் இடம் |
| 05 ம.டினோஜினி | தமிழ் | - 3ஆம் இடம் |
| 06 ப.மேஷாக் | இயந்திர தொழிநுட்பம், கிறிஸ்தவம் | - 1ஆம் இடம் |
| 07 நே.திவ்வியா | நீரியுரினவளத் தொழிநுட்பம் | - 1ஆம் இடம் |
| 08 ம.திவ்வியா | கணிதம் | - 3ஆம் இடம் |

**தரம் 11**

## க.பொ.த உயர்தரத்திற்கு தகுதி பெற்றோருக்கான பரிசு பெறும் மாணவர் விபரம்

01 இ.எழில்வதனா - 8A, B
02 உ.தர்சன் - 4A, 3B, 2S
03 அ.சங்கீதா - 4A, 3B, C
04 வி.இபிரசாந்தினி - 3A, 2B, 2C, 2S
05 ர.சர்மினி - 2A, 2B, 2C, 2S
06 செ.வைஸ்ணவி - 2A, 2B, 2C, 2S
07 ஞா.நிதுசா - A, 4C, 3S
08 ச.தரண்ஜன் - 2B, 4C, 2S
09 க.பிரியங்கா - A, 4C, 2S
10 ச.சுவர்ணா - 2B, 4C, 2S
11 த.ததீஸ்வரன் - B, 3C, 3S
12 இ.சரணியா - 5C, 3S
13 சி.துஸ்யந்தன் - 3C, 5S
14 பி.பியூலா - 3C, 5S
15 நே.யதீசன் - 3C, 4S
16 கு.துளசிகா - 2B, 5S
17 ச.நிறோஜினி - 2C, 6S

### இணைபாடவிதானச் செயற்பாடுகள்

### தமிழ்தினப் போட்டிகள்

01 இசைவும் அசைவும் பிரிவு I - சு.கிருஜா - 2ஆம் இடம்
02 பேச்சு பிரிவு II - இ.கஜானி - 1ஆம் இடம் (கோட்டம்)
03 வாசிப்பு பிரிவு II - பூ.பிருந்தன் - 1ஆம் இடம் (கோட்டம்)
04 பாவோதல் பிரிவு II - ச.சாருகா - 2ஆம் இடம் (கோட்டம்)
05 தனிநடனம் பிரிவு II - சி.சிவனுஜா - 3ஆம் இடம் (கோட்டம்)

### பண்ணிசைப் போட்டி

01 பிரிவு III - கி.றொசானி - 2ஆம் இடம் (கோட்டம்)

### ஆங்கில தினப்போட்டி

01 தரம் 3 உறுப்பெழுத்து - க.பிரதீஷா - 1ஆம் இடம் (கோட்டம்)
- 3ஆம் இடம் (வலயம்)

02 தரம் 6 உறுப்பெழுத்து - த.கிஷாந்தி - 3ஆம் இடம் (கோட்டம்)

03 தரம் 9 உறுப்பெழுத்து - கு.விதுசா - 2ஆம் இடம் (கோட்டம்)

**வணிகப்போட்டி**

01 கட்டுரைப்போட்டி பிரிவு II - உ.தர்சன் - 2ஆம் இடம் (வலயம்)

**ஆரம்பப்பிரிவுப் போட்டிகள்**

01 ஒட்டுச்சித்திரம் தரம் 3 - க.பிரதீசா - 2ஆம் இடம் (கோட்டம்)

02 சித்திரம் தரம் 5 - க.நிகல்யா - 2ஆம் இடம் (கோட்டம்)

**சமூக விஞ்ஞானப் போட்டி**

01 தரம் 11 - இ.எழில்வதனா - 2ஆம் இடம் (வலயம்)

**விளையாட்டு**

01 நீளம் பாய்தல் 17 வயதின் கீழ் ஆண்

- இ.பிரதீபன் - 1ஆம் இடம் (கோட்டம்)
- 2ஆம் இடம் (வலயம்)

**வரவு ஒழுங்கு**

- தரம் 01 - சி.டனுசன்
- தரம் 02 - ஜெ.சாருஜன், வி.ரோபிகன்
- தரம் 03 - வே.நிருஜினி
- தரம் 04 - நே.தர்மிதன், க.கோபிகா
- தரம் 05 - கே.தனுசா
- தரம் 06 - ம.தர்மிலன்
- தரம் 07 - இ.மயூரிகா, ஜெ.இந்துசன்
- தரம் 8A - ப.விலக்ஷன்
- தரம் 8B - கு.வைஷ்ணவி
- தரம் 09 - பா.தனேஸ்
- தரம் 10A - ஜெ.கோபிநாத், இ.ரஜீவன்
- தரம் 10B - ஜெ.இன்சன்
- தரம் 11A - ப.ராஜ்குமார்
- தரம் 11B - இ.எழில்வதனா

**பாராட்டுப் பெறும் மாணவத் தலைவர்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| ஜெ.இன்சன் | ச.கெனிஸ்ரன் | பா.நிருபன் | க.ஸ்ரீலக்சன் | இ.தமிழரசன் |
| நே.திவ்வியா | ச.சுபாஷினி | ற.தமிழினி | ர.பனுஜா | ம.திவ்வியா |

| இல | பெயர் | பதவி | தரம் | தகைமை |
|---|---|---|---|---|
| 1. | திரு.பாலசுந்தரம் பாலகுமார் | அதிபர் | SLPS III | Dip. in Teach, BED, MED |
| 2. | திரு.நித்தியானந்தன் முருகானந்தன் | உபஅதிபர் | SLTS I | Dip in Sp.Edu, BED, Primary Trained |
| 3. | திரு.கந்தசாமி பிரதீபன் | ஆசிரியர் | SLTS 2 II | Dip. in Teach (Maths), BED(Hons)(Maths) |
| 4. | திரு.சிவப்பிரகாசம் குலசிங்கம் | ஆசிரியர் | SLTS I | Primary Trained |
| 5. | திரு.சிறிரங்கம் சிறிலோகேஸ்வரன் | ஆசிரியர் | SLTS 2 I | Maths trained |
| 6. | திரு.மயில்வாகனம் நவஜீவா | ஆசிரியர் | SLTS 2 II | Dip. in Teach (Science) |
| 7. | திரு.சச்சிதானந்தம் சுதாகரன் | ஆசிரியர் | SLTS I | BA, Dip. in Education, MED |
| 8. | திருமதி.தயாநிதி ஞானகுமார் | ஆசிரியர் | SLTS 2 II | Dip. in Teach, BA, PGDE |
| 9. | திருமதி.சுகந்தினி யோகராசா | ஆசிரியர் | SLTS 2 II | BA, Diploma in Fisheries Science |
| 10. | திருமதி.சிவமதி ஏகாம்பரநாதன் | ஆசிரியர் | SLTS I | BA, Primary Trained, Dip.in. Edu |
| 11. | திருமதி.சயந்தவி கேதீசன் | ஆசிரியர் | SLTS 2 II | B.FA (Bharathanatyam) |
| 12. | திருமதி.ஜெயசிறீ கண்ணதாசன் | ஆசிரியர் | SLTS 2 II | BA, PGDE |
| 13. | திருமதி.விஜயலக்சுமி கருணாகரன் | ஆசிரியர் | SLTS I | Tamil Trained, BA |
| 14. | திருமதி.அற்புதமலர் இரத்தினேஸ்வரன் | ஆசிரியர் | SLTS I | BA(Hons), Dip.in. Education |
| 15. | திருமதி.சாந்தநாயகி அருள்சரான் | ஆசிரியர் | SLTS I | Diploma in Music, Dip in . Education |
| 16. | திருமதி.லதா கண்ணன் | ஆசிரியர் | SLTS 2 I | English Trained, BED (English) |
| 17. | திருமதி.பத்மப்பிரியா ரூபன் | ஆசிரியர் | SLTS 2 II | BA, English Trained |
| 18. | திரு.நாகச்சந்திரன் செல்வச்சந்திரன் | ஆசிரியர் | SLTS 2 I | BA, Dip. in. Education |
| 19. | திருமதி.நளாயினி பகீரன் | ஆசிரியர் | SLTS 2 II | BA, Dip. in. Education |
| 20. | செல்வி.கு.வில்வராணி | ஆசிரியர் | SLTS 2 II | Science Trained |
| 21. | திரு.கியோமர் ஜோ நிறோஜன் | ஆசிரியர் | SLTS 3 II | Dip in Phy Ed, Phy Ed trained |
| 22. | திரு.செல்லையா திருவிளங்கம் (வாரத்தில் இரு நாட்கள்) | ஆசிரியர் | SLTS 2 I | Technology Trained |
| 23. | திருமதி நந்தினி சத்தியரூபன் (வாரத்தில் இரு நாட்கள்) | ஆசிரியர் | SLTS 2 I | BFA, Dip.in. Education |
| 24. | திரு.பழனியாண்டவர் சுப்பரதீபன் (தொண்டராசிரியர்) ஆசிரியர் | தொண்டர் | BA | |
| 25. | திரு.அருளம்பலம் கடம்பானந்தன் (பாடசாலைப் பணியாளர்) | அலுவலர் | | |

# 2016இல் பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வுகள்



பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வில்
விருந்தினர் வரவேற்பு - 2016





பரிசளிப்பு நிகழ்வில் விருந்தினர்கள் - 2016




சிறுவர் தின நிகழ்வில் மாணவர் கௌரவிப்பு - 2016



ஆசிரியர் தின நிகழ்வில் விருந்தினர் வரவேற்பு - 2016



விஜயதசமி நிகழ்வில் ஏடு தொடக்குதல் - 2016



கால்கோள் விழா நிகழ்வில்
விருந்தினர் வரவேற்பு - 2017





மாகாண பொங்கல் தின நிகழ்வில்
விருந்தினர் வரவேற்பு - 2017




பாடசாலையின் பொங்கல் விழா - 2017




வருடாந்த இல்ல மெய்வல்லுநர் நிகழ்வில்
விருந்தினர் வரவேற்பு - 2017



வருடாந்த இல்ல மெய்வல்லுநர் நிகழ்வில்
கொடியேற்றுதல் - 2017





மாணவர் பாராளுமன்ற தேர்தல் வாக்களிப்பின் பின்



புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவியை
கௌரவிக்கும் நிகழ்வு



க.பொ.த சாதாரண தரத்தில் 8A,B பெறுபேற்றைப்
பெற்ற மாணவியை கௌரவிக்கும் நிகழ்வு




கண்டி தலாத்துஓயா தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள்
பாடசாலைக்கு வருகை தந்த போது



பாடசாலை கல்விச் சுற்றுலாவின் போது
சீத்தாஎலிய கோவிலில்



பாடசாலையின் கல்விச் சுற்றுலாவின் போது
அம்பேவெல NLDB (f) பாமில்

# பாடசாலைக் கீதம்

இராகம் :- மோகனம்
இயற்றியவர் :- அமரர் கி.நெல்லைநாதர்(ஆசிரியர்)
தாளம் :- ஆதி
இசையமைப்பு :- திருமதி.சி.விஜயரட்ணம் (ஆசிரியர்)

வாழிய அராலி இந்துக்கல்லூரி
வாழிய வாழிய வாழியவே
வையகம் எங்கும் புகழ்ந்திட எங்கும்
வளர் கல்லூரி வாழியவே

ஈழமணித் திருநாட்டினில் எங்கும்
இலங்கிடும் கலைகள் ஓங்கும்
சூழிசைக் கழகம் இதுவே என்றும்
துலங்கிடும் கலையகம் இதுவே

செந்தமிழ் ஆங்கிலம் சேர்ந்து விளங்கும்
திருநிறைக் கழகமும் இதுவே
எந்தையர் அன்புடன் இனிதுற காத்து
ஏத்து கல்லூரி இதுவே

அழகுக் கலையும் மணியார் நெசவும்
அரு விஞ்ஞான கலையும்
உழவுக் கலையும் ஓங்க நல்கும்
உயர் கல்லூரி வாழியவே

திங்கள் போலத் திகழ்ந்திடக் கல்வி
செல்வமளித்திடும் தாயே
எங்கு சென்றாலும் எத்துயர் வரினும்
என்றும் நின்நலம் மறவோம்

இனிய நற்கலைகள் நல்குமராலி
இந்துக் கல்லூரி வாழ்க
இன்பமெ சூழ்ந்திட வாழ்க வாழ்க
எல்லோரும் வாழ்ந்திட வாழ்க வாழ்க...


யா/அராலி இந்துக்கல்லூரி